முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

இ.ம.எண்.1/2021 in அசல் வழக்கு எண் 48/2013

மனுதாரர் தரப்பு சாட்சி-1 வன்னிமுத்து **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

## குறுக்கு விசாரணை

1. வாதிகள் தங்கமணி வகையறாவை தெரியாது. என் மீது யார் புகார் கொடுததார் என்றால் 4ம் வாதி புகார் கொடுத்தார். எந்த தேதி மாதம் வருடத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. எதற்காக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சொத்தை கேட்டு புகார் கொடுக்கப்பட்டு என்னை போலிசார் சொத்தை கொடுக்க சொன்னார்கள். எனது சொத்து நான் கொடுக்க மாட்டேன் என்று சொன்னேன். போலிசாரிடம் மேற்படி விவரத்தை யார் எழுதி கொடுத்தார் என்றால் எனது தரப்பு வழககறிஞர் மூலமாக காவல் துறையில் எழுதி கொடுத்தோம். வழக்கறிஞர் பெயர் என்ன என்றால் நியாபகம் இல்லை. போலிசார் அவர்கள் எழுதி கொடுத்துவிட்டார்கள் என்று பிச்சையம்மாளை அனுப்பிவிட்டார்கள். மேற்படி புகாரில் போலிசார் விசாரித்த பின்னிட்டு உடனடியாக இந்த மனுவை தாக்கல் செய்தேனா என்றால் நியாபகம் இல்லை. எவ்வளவு நாட்கள் கழித்து தாக்கல் செய்தேன் என்றால் சுமார் 5 மாத்ங்கள் இருக்கும்.

2. மேற்படி 5 மாத கால தாமதத்திற்கு காரணம் குறித்து மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்ன உள்ளது என தெரியுமா என்றால்சொன்னால் தெரியும். யார் என்று தெரியாத சூழ்நிலையில் பிச்சையம்மாள் எனது மீது புகார் கொடுக்க காரணம் என்ன என்றால் தெரியவில்லை. எனது உடன் பிறந்தோர் யார் என்றால் எனது அண்ணன் அய்யனார். அய்யனாரிடம் இருந்து தங்கமணி கணவர் இரவி சொத்தை வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரிந்து தான் பதிலுரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 767 நாட்கள் கால தாமதத்திற்கு எந்த வித காரணம் இன்றி இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் உறவு முறை தெரியாது

என்று கூறும் நிலையில் இந்த மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**